# 2

# சபை என்பது எதுவாயிருப்பதில்லை

*“இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். ஆதி காலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துவதற்கு, உங்கள் பொருட்டுத் தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷருக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் ” (கொலோ. 1:24-28).*

கொஞ்சம் குறைய ஆறு வருடங்களுக்கு முன்பாக, எனது அன்பார்ந்த நண்பர் ஒருவர் கிறிஸ்தவரானார். மனமாற்றம் அடைந்த ஒரு இளைஞராயிருந்து, கிறிஸ்தவக் குடும்பத்தில் வளரக் கூடிய பயன்களையும் மற்றும் தனது இளம் வயதில் கிறிஸ்தவ நண்பர்களிடமிருந்து உற்சாக மூட்டுதல்களையும் அவர் பெற்றிருந்ததில்லை. அவர் தமது முப்பது(வயது)களின் பிற்பகுதியில் கிறிஸ்தவராகியிருந்ததால், இழந்துபோன காலத்தைச் சரி செய்ய வேண்டும் என்று அவர் அறிந்திருந்தார். நான் அறிந்துள்ள எந்த ஒரு மனிதரைக் காட்டிலும் இவர் ஆவிக்குரிய வகையில் மிகவும் வேகமாக வளர்ந்துள்ளார். அது அவர் தேவனுடைய இராஜ்யத்தில் குழந்தையாக அல்ல ஆனால் நம்மைப் போல “முழு வளர்ச்சி” பெற்றவராகப் பிறந்ததாகவே காணப்பட்டது. ஆவிக்குரிய கேள்விகளில் அவருடைய உட்கண்ணோட்டங்கள், எப்பொழுதுமே உதவி நிறைந்ததாகவும் நடைமுறை ஞானத்தை விளக்கப்படுத்துவதாகவும் உள்ளன. நாங்கள் நடத்தியிருந்த ஒரு உரையாடலில், அவர் சபையைப் பற்றிக் கொடுத்த ஒரு விளக்கமானது என்னிடத்தில் எப்பொழுதுமே தங்கியுள்ளது. கிறிஸ்தவரல்லாதவர்களுக்குச்

சபையைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் என்ன கூற வேண்டும் என்று நான் அவரைக் கேட்டேன். அதற்கு அவர், "சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதைப் பற்றி அவர்களுக்குக் கூறுங்கள். சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதைக் கண்ணோக்கியதே புதிய ஏற்பாட்டின் சபை பற்றி நான் அறிந்து கொள்ள உதவியது" என்று கூறினார். இந்த சகோதரர் திடமான ஒரு அறிவுரை கொடுத்துள்ளார் என்றே நான் நம்புகின்றேன்.

ஒரு பாடக் கருத்தை ஆராயவும் அதுன் மீது செயல்படவும் ஒப்பிட்டுப் பார்த்தல் மற்றும் ஒப்புவமை காட்டுதல் ஆகியவை மேன்மையான வழிமுறைகளாய் உள்ளன. தேவனுடைய சத்தியமானது தவறுடன் ஒன்றாக வைக்கப்பட்டு அதனுடன் ஒப்பிடப்படும்பொழுது அடிக்கடி மிகத் தெளிவானதாகக் காணப்படுகின்றது. மத்தேயு 23ல் இயேசு தம்முடைய சீஷர்கள் என்ன செய்யக்கூடாது என்பதை வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்களின் உதாரணங்களைச் சுட்டிக்காட்டுகையில் இந்த போதனை நுணுக்கத்தைப் பயன்படுத்தினார். அவர், "வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யா திருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யா திருக்கிறார்கள்" (மத். 23:2, 3) என்று கூறினார்.

சபை என்பது என்ன என்பது பற்றிப் புதிய ஏற்பாடானது திட்டவட்டமாய் உள்ளது.[1] அது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப் படிந்துள்ள மக்களால் ஆன ஆவிக்குரிய ஒரு சரீரமாக உள்ளது, இதன் மூலம் அவர்கள் அவருடைய மக்களாகி, ஒரு குறிப்பிட்ட உள்ளூர்ப் பகுதியில் அவருடைய மக்கள் என்ற வகையில் அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்கின்றனர் என்று அர்த்தமாகின்றது. அவர்கள் கிறிஸ்துவின் பெயரை அணிந்து கொண்டு அவரைத் தங்களுடைய ஆண்டவராகக் கண்ணோக்கு கின்றனர். அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் தங்களுக்குள் வாழப் பெற்றுள்ள ஒரு உயிர்ப் பொருளாக உள்ளனர். இந்த சரீரத்தில் உள்ளவர்கள் அவருடைய வசனத்தின் மூலமாக தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருடன் நெருக்கமான தொடர்ந்திருக்கும் ஒரு ஐக்கியத்தை நிலைநாட்டுகின்றனர்.

சபை என்றால் என்ன என்ற இந்தக் கருத்துப் பின்னணிக்கு எதிராக, சபை என்றால் எதுவல்ல என்பதை நாம் எச்சரிக்கையாகக் கவனிக்க வேண்டும். இதன் மூலம், புதிய ஏற்பாட்டு சபையானது எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் நோக்கங் கொண்டார் என்பதை நாம் இன்னும் மிகச் சரியாகக் காணலாம் என்று நம்பிக்கை கொள்ளலாம் என்பது அர்த்தமாகின்றது.

## பொருட்களால் ஆன ஒரு கட்டிட அமைப்பு அல்ல

முதலாவதாக, சபை என்பது பொருட்களால் ஆன ஒரு கட்டிட

அமைப்பு அல்ல. சபை கூடிவரும் கட்டிடத்தைக் கடந்து செல்லும் பொழுது ஒருவர், "அதோ சபை!" என்று வியக்கின்றார், இருந்தாலும் அவர் கூறுவது தவறாகவே உள்ளது. சபை என்பது செங்கற்கள், சிமென்ட் போன்ற பொருட்களால் ஆன கட்டிடம் அல்ல. ஜீவனுள்ள கற்களாகிய கிறிஸ்தவர்களே, சபை என்று அழைக்கப்படும் சரீரத்தில் உள்ளனர் (1 கொரி. 12:27; 1 பேது. 2:5).

சபையானது கூடி வந்து ஆராதிக்க ஒரு கட்டிடத்தைப் பயன் படுத்தலாம்; ஆனால் சபையென்பது மரம், உலோகம், கல் மற்றும் கண்ணாடி போன்ற பொருள்களாய் இருப்பதில்லை. சபை என்பது உயிருள்ள ஒரு பொருளாகும். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே. 2:22) என்று கூறினார். பேதுரு, "நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் ... கட்டப்பட்டு வருகிறீர்கள்" (1 பேது. 2:4, 5) என்று கூறினார்.

சபையில் உள்ளவர்களின் மனித சரீரங்கள் என்ற ஆவியானவர் வாசம் பண்ணும் அவர்களுடைய உடல்கள் மட்டுமே சபையின் பொருளாலான அம்சமாக உள்ளது. ஒரு மனிதர் என்பவர், இயல்பான உடலில் மனிதரின் ஆவி வாழும் அமைப்பாக உள்ளார். அந்த மனிதர் கிறிஸ்தவராகும் பொழுது, அவர் சபையாகின்றார். சபை என்ற வகையில் அவர் நடந்து கொண்டு, ஆராதித்து, சித்தங்கொள்கின்றார் மற்றும் தனது இயல்பான உடலினால் பணி புரிகின்றார். அது ஒன்றுதான் சபையின் தொட்டறியக் கூடிய பண்பாக உள்ளது.

சிலவேளைகளில் ஒரு நபர், "நான் சபைக்குச் செல்லுகின்றேன்" என்று கூறலாம். புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அவர், ''நான் சபை கூடுதலுக்குச் செல்லுகின்றேன்'' என்று அர்த்தப்படுத்துகின்றார். புதிய ஏற்பாட்டில் ''சபை'' என்ற வார்த்தையானது கூடி வருதலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது (1 கொரி. 11:18); ஆனால் புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தையின் இன்னும் வெகுவான பயன்பாட்டைப் பற்றி - கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்கான ஒரு பெயர் பற்றி - சிந்தித்துப் பார்த்தால், "நான் சபைக்குச் செல்லுகின்றேன்" என்று கூறுவது சரியற்றதாக இருக்கும். நாம் சபைக்குச் செல்ல முடியாது, ஏனென்றால் நாமே சபையாக இருக்கின்றோம்! சபையார் அல்லது கிறிஸ்தவர்கள் ஆராதனை மற்றும் வேதபாடம் ஆகியவற்றிற்காக ஒரு இடத்தில் ஒன்றுகூட முடியும், ஆனால் கிறிஸ்தவர் ஒருவர் ஆராதிப்பதற்காக சபைக்குச் சென்று அதன் ஒரு பாகமாக முடியாது, பின்பு ஒருவர் ஒரு வீட்டை விட்டு வெளிச் செல்வது போல கிறிஸ்துவின் சரீரத்தை விட்டு வெளியேற முடியாது.

சபையானது பொருட்களால் ஆன ஒரு கட்டிடமாய் இருப்பதில்லை என்பதால் நாம் மகிழ்வடைவதில்லையா? அது அவ்விதமானதாய் இருந்திருந்தால், அது ஒரு இடத்திற்குரியதாகி, வரையறைப்படுத்தப்பட்டு, ஜீவனற்றதாகி, மற்றும் அன்பில்லாததாகி விடும். பேராலயத்தில் மட்டுமே ஆராதனை நடத்தப் பெற முடியும் என்றால், ஆராதனையானது ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே நடத்தப்படுவதாய் இருந்து விடும்.

இதற்குப் பதிலாக, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட மக்கள் என்ற வகையில் சபையானது உலகத்தின் அனைத்து மக்களிடத்திலும் எல்லா இடங்களிலும் கிறிஸ்துவின் செல்வாக்கைப் பரவச் செய்கின்றதாக உள்ளது. இது பரலோகத்தில் இருக்கின்ற தங்கள் பிதாவை கிறிஸ்தவர்கள் தாங்கள் முடிவு செய்யும் எந்த இடத்திலும், எந்த வேளையிலும் ஆராதிக்கக் கூடியவர்களாக்குகின்றது. சபை என்பது கிறிஸ்தவர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் செல்லுகின்றது, ஏனெனில் அது கிறிஸ்தவர்களாகவே இருக்கின்றது.

நாம் கூறுபவற்றிலும் செய்பவற்றிலும் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் கிறிஸ்துவின் சபையார் என்ற வகையிலேயே நாம் பேசி, செயல்படுகின்றோம். நாம் ஆராதனைக்குக் கூடிவரும் போது மாத்திரம் அவருடைய சபையாராய் இருக்கிறோம் என்று ஆகாது; நாம் எங்கிருப்பினும் அவருடைய சபையாராகவே இருக்கின்றோம். அவர் தம்முடைய இரத்தத்தினால் நம்மை "அவருக்குச் சொந்தமான மக்களாய்" இருக்கும்படியாக அழைத்து, பிரித்தெடுத்து, பரிசுத்தப்படுத்தியுள்ளார். தேவன், ஒரு இறந்து போன சரீரத்தை, துடிப்பற்ற பொருளைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் அவர் மன்னிக்கப்பட்டு, தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களால் ஆன ஜீவனுள்ள ஒரு குடும்பத்தைப் பெற்றுள்ளார். அவருடைய சபையானது ஆவிக்குரிய நாடாக, பரிசுத்த ஆசாரியத்துவமாக, அவருடைய ஐக்கியத்திற்கான ஒரு சமூகமாக உள்ளது (1 பேது. 2:9).

## ஒரு நட்புறவுச் சமூகமல்ல

இரண்டாவதாக, சபை என்பது ஒரு சமூகக் கழகம் அல்ல. இது மற்றவர்களுடன் நட்புறவையும் மகிழ்வான தொடர்புகளையும் தூண்டி விடுவதைக் காட்டிலும் மேலானதாக உள்ளது.

ஐக்கியம் என்பது சபையின் உடனடியான பலனாக உள்ளது, ஆனால் சபையானது ஐக்கியத்தைக் காட்டிலும் அதிகம் மேலானதாக உள்ளது. மனமாற்றத்தில் ஒருவர் ஆவிக்குரிய மரணத்தினின்று தூக்கி விடப்பட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களுடன் வைக்கப்படுவதின் மூலம் உயிரூட்டப்படுகின்றார். பவுல் பின்வருமாறு எழுதினார்:

> தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் ... கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார் (எபே. 2:4-7).

நம்மில், தேவன் தம்முடைய குமாரனின் பலியினால் மீட்கப்பட்டவர்கள் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் சுவிகரிக்கப்பட்டுள்ளோம், மற்றும் அவர், "அப்பா! பிதாவே! என்று கூப்பிடத் தக்கதாக ... தமது குமாரனுடைய

ஆவியை (நமது) இருதயங்களில்" (கலா. 4:6) அன்புடன் அனுப்பினார். தேவனுடைய குடும்பம் என்ற வகையில் சபையானது, ஆழமான தனிப்பட்ட உள் உறவுகளினால் பண்பு படுத்தப்படுகின்றது, ஆனால் தேவனுடனான நமது குடும்பப் பிணைப்புகளினால் இந்த ஐக்கியமானது வளர்ந்தேறுகின்றது. அப்போஸ்தலரான யோவான், "இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான்" (1 யோவா. 5:1) என்று எழுதினார்.

---

*தேவன், ஒரு இறந்து போன சரீரத்தை, துடிப்பற்ற பொருளைக் கொண்டிருப்பதில்லை. ஆனால் அவர் மன்னிக்கப்பட்டு, தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களால் ஆன ஜீவனுள்ள ஒரு குடும்பத்தைப் பெற்றுள்ளார்.*

---

ஒருவேளை, நீங்கள் ஒரு குழந்தையாய் இருந்த பொழுது உங்கள் பெற்றோர் இறந்து போனதால், அவசியத்தின் காரணமாக நீங்கள் ஒரு அனாதை விடுதியில் சேர்க்கப்பட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் "இல்லமற்றவர்" என்ற வார்த்தையினால் விவரிக்கப்படுகின்ற இக்கட்டு நிறைந்த தனிமையையும், வெறுமையையும் மற்றும் பிரிவுத் துயரத்தையும் அனுபவித்தீர்கள். ஆண்டுகள் கடந்தன, உங்கள் சொந்தக் குடும்பத்தைக் கொண்டிருந்தால் எப்படியிருக்கும் என்பது உங்களால் நினைவுகூர முடியாததாகி விட்டது. ஒருநாள், நீங்கள் ஒரு அற்புதமான குடும்பத்தினால் தத்து எடுத்துக் கொள்ளப்படுகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் அன்பும் அடையாளப்படுத்துதலும் கொண்ட ஒரு உலகத்தினுள் கடந்து செல்லுகின்றீர்கள். உடனடியாக உங்களில் அன்பு காட்டவும், உங்களைக் கவனித்துக் கொள்ளவும் பூமிக்குரிய ஒரு தகப்பனை நீங்கள் பெற்றீர்கள், ஒரு தாயன்பின் மென்மையான பராமரிப்பை நீங்கள் பெற்றீர்கள், ஆதரவிலும் குடும்பப் பாசத்திலும் உங்களுடன் இணைக்கப் பட்ட சகோதர சகோதரிகளை நீங்கள் பெற்றீர்கள். குடும்பம் ஒன்று கூடியிருக்கும் அழகு நிறைந்த நாட்கள் உங்களுடையவைகளாய் இருந்தன, மற்றும் நீங்கள் அந்தக் குடும்பத்தால் உருவாக்கப்பட்டு ஏவுதல் பெற்ற ஒரு எதிர்காலத்தைப் பெற்றிருந்தீர்கள். காலங்கள் செல்லச் செல்ல நீங்கள் ஆழமான குடும்ப அன்பை அறிய வந்தீர்கள். இவை எல்லாவற்றையும் கொண்டு வந்தது எது? ஒரு சமூகக் கழகத்தில் இருந்த நட்புறவு மற்றும் தொடர்பு ஆகியவற்றினால் மட்டும் நீங்கள் (அக்குடும்பத்துடன்) ஒன்றாகும்படி கவரப்பட்டீர்களா? இல்லை. நீங்கள் இந்தக் குடும்பத்திற்குள் சுவிகரிக்கப்பட்டீர்கள். நீங்கள் இந்தக் குடும்பத்தின் உள்ளார்ந்த ஒரு அங்கமானீர்கள், மற்றும் நீங்கள் இந்தக் குடும்பத்துடன் ஒன்றானதைத் தொடர்ந்து, ஐக்கியமும் ஆசீர்வாதங்களும் உண்டாயின.

இப்பொழுது, புதிய கிறிஸ்தவருக்கு இதே வகையான ஒரு மாற்றம்

நடைபெறுகின்றது. அவர் ஒரு புதிய குடும்பத்தில், தேவனுடைய குடும்பத்தில் இடம் பெறுகின்றார். இந்தச் செயல்முறையை விவரிப்பதற்கு "சுவிகாரம்" என்ற வார்த்தையையும்கூடப் பவுல் பயன்படுத்துகின்றார் (எபே. 1:6).

ஒரு நபர் ஒருபொழுதும் தனது வாழ்வு முறைகளை மாற்றிக் கொள்ளாமலேயே ஒரு சமூகக் கழகத்தில் சேர முடியும். ஒரு சமூகக் கழகம் என்பது வாழ்வின் பணிகளில் "கூடுதலாக" இணைப்பு பெற்றதாக மட்டும் உள்ளது. அது நமக்குப் பயன்படாவிட்டால் எப்பொழுது வேண்டுமானாலும் அதை நாம் நீக்கிப் போட்டு விடலாம். அது நமது பொழுது போக்கிற்காகவும் சந்தோஷத்திற்காகவும் இருக்கின்றது. குடும்பம் ஒன்றில் பிரவேசித்தல் என்பது முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. நீங்கள் குடும்பத்தினுள் பிரவேசிக்கின்றீர்கள், மற்றும் குடும்பம் உங்களுக்குள் பிரவேசிக்கின்றது. இது உங்கள் வாழ்வுக்கு ஒரு "கூடுதலான ஆசீர்வாதமாக" மட்டும் இருப்பதில்லை; நீங்கள் அந்தக் குடும்பமாக ஆகி விடுகின்றீர்கள். நீங்கள் அதன் பெயரை எடுத்துக் கொள்கின்றீர்கள்; அதன் உறுப்பினர்கள் யாவரும் உங்களுடையவர்களாகின்றனர், நீங்கள் அவர்களுடையவர்களாகின்றீர்கள். வாழ்வின் வேறு எந்த உறவைக் காட்டிலும் அதிகம் முழுமையாக நீங்கள் ஒன்றாகப் பிணைக்கப்படுகின்றீர்கள்.

தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிக்கும் யாவரும் அச்செயலைப் புதிய பிறப்பொன்றினால் செய்கின்றனர் (யோவா. 3:5). நீங்கள் அதில் "சேர" முடியாது; நீங்கள் அதற்குள் பிறந்தவராக இருக்கின்றீர்கள், அல்லது அதற்குள் தத்து எடுக்கப்படுகின்றீர்கள். எவரொருவரும் மாற்றம் இல்லாமல் அவருடைய குடும்பத்திற்குள் பிரவேசிக்க முடியாது. நாம் கிறிஸ்துவினுடையவர்களாகும் பொழுது, நாம் கிறிஸ்துவின் பெயரை எடுத்துக் கொள்ளுகின்றோம், மற்றும் ''கிறிஸ்த-வர்கள்'' என்று அழைக்கப் படுகின்றோம். நாம் நமது உறவுமுறைமைகளில், நமது நடக்கையில், மற்றும் நமது ஆழ்ந்த விருப்பங்களில் மாறுபட்டவர்களாகின்றோம். நாம் தேவனால் வழிநடத்தி போஷிக்கப்பட்டு, வளப்படுத்தி நலப்படுத்தப்பட்டு, அளித்துப் பாதுகாக்கப்பட்டுள்ள ஒரே குடும்பத்தார் ஆகின்றோம். நாம் இயேசுவின் இரத்தத்தினால் ஒன்றுகூட்டிக் கட்டப்பட்டுள்ள பிள்ளைகள் என்ற வகையில் வாழ்ந்து, ஆராதித்து, ஊழியம் செய்து தொடர்ந்து நிலைத்துள்ள ஐக்கியத்தைப் பெறுகின்றோம்.

## ஒரு மனித ஆலோசனையல்ல

மூன்றாவதாக, சபை என்பது வெறுமனே ஒரு மனித ஆலோசனையாக இருப்பதில்லை. இது மனிதரால் சிந்திக்கப்படவுமில்லை அல்லது மனிதரால் கண்டுபிடிக்கப்படவும் இல்லை. இது மனிதரால் கட்டுப்படுத்தப் படுவதுமில்லை அல்லது மனிதரால் நிலைநிறுத்தப்படுவதும் இல்லை.

சபையானது, தேவனுடைய கருத்தாகவும் தேவனுடைய படைப்பாகவும் உள்ளது. அவர் உலகத்தை இருக்கச் செய்யும்படி உரைப்பதற்கு முன்பே, மனிதரின் இரட்சிப்புக்காக அவர் சிலுவையையும் சபையையும் திட்டமிட்டிருந்தார். முதல் பாவத்திற்கு முன்பாகவே அவர் மன்னிப்பைப்

பற்றி எண்ணியிருந்தார். நித்தியத்தின் கடந்த காலத்தில் தேவன் முதல் விண்மீன் அல்லது புல்லின் இதழைப் படைக்கும் முன்பாகவே, முதல் பட்டாம் பூச்சி அல்லது மனிதப் பிறவியைப் படைக்கும் முன்பாகவே, தேவன், கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கப் போகின்றவர்களை இரட்சிக்க வேண்டும் என்பதைத் தேர்ந்து கொண்டார். ஆகையால், கிறிஸ்தவர்கள், ''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே'' கீழ்ப்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தேர்ந்து கொள்ளப் பட்டவர்களாய் இருக்கின்றோம் (1 பேது. 1:2). ஆட்டுக்குட்டியான வருடைய விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்களான தேவனுடைய பரிசுத்தவான்கள் உலகத்தோற்ற முதல் ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்பட்டவர்களென்று வெளி. 13:8ல் விவரிக்கப்படுகின்றனர். சிலுவையின் மூலம் மீட்கப்படுவதைத் தேர்ந்து கொள்பவர்களைத் தேவன் - தனித்தனியாக அல்ல, ஆனால் ஒரு குழுவாக - இரட்சிக்கத் தேர்ந்து கொண்டார். சபை என்பது கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதின் விளைவாக இருந்தது மற்றும் இருக்கின்றது. கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் ஒரு இராஜ்யமாக்கப்பட்டார்கள் என்பதாக யோவான் கூறினார் (வெளி. 1:5, 6).

இந்தச் சிந்தனை வரிசையானது நமது சிந்தைகளில் மிகவும் இன்றியமையாத ஒரு சத்தியத்தைப் பற்றியெரியச் செய்கின்றது: கிறிஸ்துவின் பலியானது உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவனுடைய சித்தத்தில் இருந்தது என்றால், சபையானது கிறிஸ்துவின் இரத்தத்தினாலே உண்டாக்கப்பட்டது என்றால், சபையானது தேவனுடைய அநாதி தீர்மானமாகும் என்ற கருத்து தொடருகின்றது. ஆகையால் இந்த சத்தியத்தைப் பவுல் எபேசியர் 3:9, 10ல் குறிப்பிடுவதை நாம் காணும் பொழுது வியப்படையக் கூடாது:

> தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக.

கலாத்தியாவில் ஒரு சிறுபான்மையினர் கிறிஸ்துவின் அப்போஸ்தலர் என்ற வகையில் பவுலின் அதிகாரத்தை புறக்கணித்திருந்தனர், மற்றும் இதன் காரணமாக அவரின் செய்தியை அவர்கள், தேவனால் ஏவப்பட்டதென்று ஏற்றுக் கொள்ளாதிருந்தார்கள். அவர் தமது அப்போஸ்தலத்துவத்திற் கெதிரான அவர்களது குற்றச்சாட்டிற்குத் தாம் அவர்களுக்கு எழுதிய நிருபத்தின் தொடக்கத்தில் பதில் அளித்தார்: "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந் தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்," (கலா. 1:1). சுருக்கமாய்ச் சொல்வதென்றால், பவுலின் அப்போஸ்தலத்துவமானது மனிதரால் தொடக்கி வைக்கப்படவில்லை, அது

மனிதரால் செயல்படுத்தப்படவும் இல்லை என்பதே அவரது கருத்தாக இருந்தது, ''எனது அப்போஸ்தலத்துவமானது இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பரலோகத்திலிருந்து நேரடியாக வந்தது'' என்று அவர் கூறினார்.

பவுல் தமது அப்போஸ்தலத்துவத்தைப் பற்றிக் கூறிய விஷயம் எதுவோ, அது சபையைப் பற்றியும் கூட கூறப்பட முடியும்: சபையானது மனிதர்களிடத்திலிருந்து வரவில்லை. இது தெய்வீகமானதாக உள்ளது. இது பரலோகத்தில் திட்டமிடப்பட்டு, பரலோகத்தினால் அறிவிக்கப்பட்டு, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்டதாக உள்ளது. இதன் கருத்துப் பொருளானது தேவனுடைய சிந்தையில் தோன்றப் பெற்றது. இதற்கான திட்டமானது சிலுவையில் இயேசு அடைந்த மரணத்தினாலும், பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழியப்பட்டதினாலும் செயல்படுத்தப்பட்டது. கர்த்தருடைய வசனத்தினாலும், உள்ளாக வாசம் பண்ணும் ஆவியானவராலும் மக்கள் சபைக்குள் பிரவேசித்து அதற்குள் நிலைநிறுத்தப்படுகின்றனர். இது கிறிஸ்துவினுடையதாக உள்ளது; எனவே இதன் மாபெரும் தன்மையானது மனித அறிவினாலோ அல்லது செயல்களினாலோ மேம்படுத்தப்பட முடியாது மற்றும் இதன் மகிமையுடன் மனித சிந்தை அல்லது பலத்தினால் வேறு மகிமை எதையும் கூட்ட முடியாது.

ஒருவர் சபைக்குள் பிரவேசிக்கின்ற பொழுது, அவர் மனித நிறுவனம் ஒன்றிலோ அல்லது பெயர்க்குழு ஒன்றிலோ பிரவேசிப்பதில்லை. உலக ஞானம், சக்தி, யுக்திகள் அல்லது பலம் ஆகியவற்றின் மீது நாம் நமது நித்திய நம்பிக்கையை வைக்கும்படி தேவன் நம்மைக் கேட்டிருக்கவில்லை. தேவ ஞானத்தைத் தனக்கு முன்னும் தனக்குள்ளும் கொண்டுள்ளதான, தெய்வீகத்துவமாக உருவாக்கப்பட்டதான கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசிக்கும்படி அவர் நம்மைக் கேட்டுக் கொண்டுள்ளார், இது அவருடைய வல்லமையினால் கட்டுவிக்கப்பட்டு அவருடைய கிருபை மற்றும் வழி நடத்துதலால் நித்தியத்திற்கும் பாதுகாக்கப்படுகின்ற ஆவிக்குரிய ஒரு சரீரமாக உள்ளது.

வேத வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏவுதல் பெற்ற சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது ஒன்றுதான் இந்த சபைக்குள் பிரவேசிக்கக் கூடிய ஒரே வழியாக உள்ளது (2 தெச. 1:7-9). வேத வசனத்தில் கிறிஸ்தவ வாழ்வுக்கென்று காணப்படும் முன்மாதிரியைத் தினந்தோறும் பின்பற்றுதல் என்பதே ஒருவர் தொடர்ந்து கிறிஸ்துவின் சபையாராக இருப்பதற்கான ஒரே வழியாகும் (1 யோவா. 5:2, 3). இந்த சபைக்கு வேத வசனங்களைத் தவிர சட்ட நூல் வேறெதுவும் இல்லை, கிறிஸ்துவைத்தவிர வேறு தலைவரும் இல்லை.

## ஒரு தெய்வீகப் பதிலீடு அல்ல

நான்காவதாக, சபை என்பது தோல்வியுற்ற ஒரு திட்டத்திற்கான பதிலீடு அல்ல. இது கர்த்தர் தம்முடைய சிந்தையில் கொண்டிருந்தும், உலகத்தின் பாவம் நிறைந்த தன்மையினால் ஏற்படுத்த முடியாது போய் விட்ட மிக

உயர்ந்த அமைப்புக்குப் பதிலாக வைக்கப்பட்ட ஒரு பதிலீடு அல்ல.

சபை யுகம் என்பது காலத்தின் தொடக்கம் முதலாகவே அதை (சபை யுகத்தை) நோக்கியே தேவன் பணி செய்ததாகவும் அதை நோக்கியே அவர் கடந்து சென்றதாகவும் உள்ளது. முறைப்படி இராஜ்யம் வரப் போவதைத் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்தனர். "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற். 1:15) என்று அறிவித்ததின் மூலமாகவே இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தைத் தொடங்கினார். சிலுவை நெருங்கி வருகையில், இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்குப் பின்வருமாறு கூறினார்:

> மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் (மத். 16:18, 19).

இயேசுவின் இராஜ்யமானது நிலைநாட்டப்படுவதற்குச் சில நாட்கள் முன்னதாக அவர், "நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்" (அப். 1:4) என்று அவர்களிடம் கூறினார். பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டார், மற்றும் அவர்கள் ஆவியானவரின் வல்லமையினாலும் செல்வாக்கினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப். 2:11-15ல் பேதுரு, இந்த அற்புத நிகழ்ச்சியை யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக (யோவேல் 2:28-31) அடையாளப்படுத்தினார், அது தேவனுடைய இராஜ்யத்தின் யுகமான சபை யுகத்தின் தொடக்கமானது "கடைசி நாட்களில்" இருக்கும் என்று முன்னுரைத்திருந்தது. இவ்விதமாக, தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய வடிவமான சபையானது தேவனுடைய கால அட்டவணையின்படி தேவனுடைய வழிமுறையில் நிலைநாட்டப்பட்டது.

ஆயிரமாண்டுகள் முன் அரசாட்சிக் கொள்கை என்பது பெரும்பாலானவர்களால் இல்லாவிட்டாலும் பல பெயர்க் குழுக்களால் ஆதரிக்கப்படும் புகழ் பெற்ற ஒரு மார்க்கரீதியான தவறாக உள்ளது. வெளி. 20:1-4ன் உருவக மொழியின் அடிப்படையை முற்றிலும் சார்ந்த வகையில், "முன்" என்பது "முன்னதாக" என்றும் "ஆயிரமாண்டு" என்பது "ஒரு ஆயிரம் ஆண்டுகள்" என்றும் அர்த்தப்படுகின்றது. வேத வசனங்களின்படியல்லாத இந்த போதனையானது காலங்களின் முடிவில் கிறிஸ்து தம்முடைய இராஜ்யத்தை நிலைநாட்டுவதற்காக வருவார் என்று உறுதிப்படுத்துகின்றது. இது இந்தப் பூமியில் இயேசு ஒரு ஆயிரம் ஆண்டுகள் காலத்திற்கு எருசலேமில் தாவீதின் அரியணையில் இருந்து ஒரு அரசராக ஆளுகை செய்வார் என்று போதிப்பதில் மனநிறைவடைகின்றது. இந்தக் கண்ணோட்டத்தைப் பற்றிக்கொண்டுள்ளவர்கள், இஸ்ரவேல் இனமானது

இந்தக் காலத்தின் போது பலஸ்தீன் நாட்டின் மீளக்கட்டப்பட்டு பூமியின் இனங்கள் மீது ஆளுகை செய்யும் என்று எதிர்பார்க்கின்றனர். இவர்கள், கி.பி. 70ல் தீத்து ராயனால் அழிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டின் தேவாலயமானது மீண்டும் கட்டப்படும் என்றும், பழங்கால லேவி கோத்திரத்தின் பலி முறைமைகள் மீண்டும் ஒருமுறை செயல்படுத்தப்படும் என்றும் நம்புகின்றனர். இயேசு தம்முடைய இராஜ்யத்தை நிலை நாட்டுவதற்காக முதல்முறை வந்தார், ஆனால் அவரது முயற்சியானது புறக்கணிக்கப்பட்டதால் அவர் தம்முடைய இராஜ்யத்திற்குப் பதில் சபையை நிலைநாட்டினார் என்று ஆயிரமாண்டு முன் அராட்சிக் கொள்கையானது முடிவு செய்கின்றது. ஆகையால் ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் சபையை உண்மையாகக் கொண்டு வந்திருக்கப்படவேண்டிய இராஜ்யத்திற்குப் பதிலாக ஏற்படுத்தப்பட்ட தென்று காண்கின்றனர்.

சபை மற்றும் இராஜ்யத்தைப் பற்றிய சிந்தனையின் விவேகமற்ற இந்த வலைப்பின்னல் வேலையில் ஒரு விஷயம் மட்டும் தவறாக உள்ளது: இது உண்மையல்ல. இது தேவனுடைய வசனத்தின்படியல்ல ஆனால் மனிதருடைய கவர்ச்சிகரமான கோட்பாடுகளினால் வளர்ந்தேறியுள்ளது. ஒவ்வொரு விஷயமாக மறுப்பதற்குப் பதிலாக நாம், எபேசியர் 3:11ல் சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியானது என்ற பவுலின் அறிவிப்பின் பக்கம் நம் கவனத்தைத் திருப்ப வேண்டியது மட்டுமே அவசியமானதாக உள்ளது. இந்தத் தவறான போதனையை ஒரே வாக்கியத்தைக் கொண்டு அவர் முறியடிக்கின்றார். இந்த விஷயத்தில் ஒரு நூறு கிராம் சத்தியமானது டன் கணக்கான தவறை அழிக்கின்றது. பரிசுத்த ஆவியானவருடைய கூற்றின்படி, சபையானது தேவனுடைய திட்டத்திற்கு இணைப்பாக, “கூட்டப்பட்டதாக” இல்லாமல் சபையே தேவனுடைய திட்டமாக உள்ளது.

பதிலீடு என்பது எப்பொழுதுமே இரண்டாந்தரமான, மிகச் சிறந்த ஒன்றிற்குப் பதிலாக இருப்பதாகும். ராகேலின் மீது கொண்ட அன்பினால் யாக்கோபு அவளைத் தனக்கு மணம் முடித்து வைக்கும்படிக் கேட்ட பொழுது அவருக்கு லேயாளை வஞ்சனையாய் மணம் முடித்து வைத்ததைக் கேட்கின்ற பொழுது உங்கள் இருதயம் இற்றுப் போவது இல்லையா (ஆதி. 29:16-25)? உங்கள் திருமண நாளில் நீங்கள் மிகவும் நேசித்த உங்கள் மணப் பெண்ணுக்குப் பதில் இன்னொரு பெண் கொடுக்கப்பட்டால் எப்படி யிருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா?

எவரொருவரும் ஒரு போலியில், ஒரு பதிலீட்டில் உண்மையாக நிறைவடைவதில்லை என்று நாம் அறிந்துள்ளதால், யாக்கோபைக் குறித்து நாம் பரிதாபப்படுகின்றோம். உண்மையான பொருளானது அதன் பதிலீட்டைக் காட்டிலும் எப்பொழுதுமே அதிகமாய் விரும்பப்படக் கூடியதாக உள்ளது. சபையானது ஒரு பதிலீடு அல்ல ஆனால் அது அதிகாரப் பூர்வமானதாக உள்ளது.

புதிய ஏற்பாட்டில் உள்ள சபையானது இராஜ்யம் பற்றிய தீர்க்க தரிசனங்களின் மகிமை பொருந்திய நிறைவேற்றமாக உள்ளது என்று

கூறுவதன் மூலம் தேவன் சபையின் அழகையும் தனிச்சிறப்பையும் நமக்குக் காண்பிக்கின்றார். இயேசு சபையை, "திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலான வைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:26, 27) என்று பவுல் கூறினார்.

சபை என்பது மிகச் சிறந்த ஒன்றிற்கான பின்பலமாய் இராமல், அதுவே தேவனுடைய முதல் தெரிவாக உள்ளது என்பதில் நீங்கள் என்னுடன் சேர்ந்து அகம் மகிழ மாட்டீர்களா? நாம் சபையின் பாகமாக ஆவதில், பாவம் நிறைந்த மனிதருக்கான தேவனுடைய ஞானமான திட்டம் மற்றும் இரக்கம் நிறைந்த செயல்பாடு ஆகியவற்றின் கனிகளில் பாகம் ஆகின்றோம். சபை என்பது வெறுமனே ஒரு நிரப்பியாக இராமல் நமது மீட்புக்கான தேவனுடைய நித்திய தீர்மானமாக உள்ளது என்பதை இந்த கணத்திலேயே நீங்கள் ஆழ்ந்து சிந்தித்து நன்றி செலுத்தும் ஜெபத்தில் தேவனைத் துதியுங்கள்.

## முடிவுரை

புதிய ஏற்பாட்டு சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதை நாம் கவனிப்பதன் மூலம் அதை (சபையை) நாம் காண்கின்றதில்லையா? சபை என்பது பொருட்களால் ஆன ஒரு கட்டிட அமைப்பல்ல; அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் உள்ளது. அது ஒரு சமூகக் கழகம் அல்ல; அது தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாக உள்ளது, புதிய பிறப்பினால் அதில் பிரவேசிக்கக் கூடியதாக உள்ளது. அது ஒரு மனிதரின் ஆலோசனையாக இருப்பதில்லை; அது சிலுவையின் மூலமாகத் தேவனுடைய வடிவமைப் பாகவும் விருப்பமாகவும் உள்ளது. அது தேவனுடைய உண்மையான நோக்கத்திற்கு ஒரு பதிலீடாக இருப்பதில்லை; அது இராஜ்யத்தின் தீர்க்க தரிசனங்கள் மற்றும் தேவனுடைய அநாதி தீர்மானம் ஆகியவற்றின் நிறைவேற்றமாக உள்ளது. ஒருவர் சபையில் பிரவேசிக்கும் பொழுது, நித்திய காலமாக தேவனுடைய மிக மேன்மையான திட்டமாய் இருந்த ஒன்றில் பிரவேசிக்கின்றார்.

ஒரு சிறு பையன் அவனது வீட்டிற்கு வந்த விருந்தினர்களால் தனது பெயர் என்ன என்று கேட்கப்பட்டான். அவன் "வெளியே போ என்பது எனது பெயராகும்" என்று பதில் அளித்தான். சந்தேகமடைந்த விருந்தினர் கள், "உன் பெயர் வெளியே போ என்பதை எப்படி நீ அறிந்துள்ளாய்?" என்று கேட்டனர். அவர்களை நோக்கிக் கூடப் பார்க்காமல் அச்சிறுவன், "மக்கள் என்னைப் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அவர்கள் 'வெளியே போ' என்றே கூறுகின்றனர்!" என்றான். அந்தச் சிறு பையனின் மனதில் அந்த அளவுக்கு எதிர்மறைக் குணம் இருந்தது அல்லது குறைந்தபட்சம் அவன் எதிர்மறையாளனாக இருந்தான். அவனது பெயர் வெளியே போ என்பதாக ஆயிற்று.

சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்பதை நாம் படிக்கையில் இதே போன்ற ஒரு அபாயமானது நம் அருகில் அசைவாடலாம். இப்படிப்பட்ட

*தொரு படிப்பானது சபை என்பது "இல்லைகளின்" ஒரு கட்டு மட்டுமே என்று நாம் காணும்படி வழிநடத்த நாம் அனுமதிக்கக் கூடாது. கிறிஸ்தவர் என்பவர் இரு கால்களாலும் "எதிர்ப்பாக" மட்டுமே நடக்கின்றவரல்ல, அவர் எதிர்ப்பாக உள்ளார் என்று மட்டும் அறியப்படுவதில்லை. எதிர் மறைகள் என்பவை நேர்மறைகளைப் புலப்படச் செய்வதற்காகவே உள்ளன. சபை என்பது எதுவாய் இருப்பதில்லை என்று காண்பதானது சபை எதுவாக உள்ளது என்பதை நாம் முடிவு செய்யவும் நாம் சபையாராக ஆவதற்கும் உதவும் வகையில் பணி செய்கிறது.*

*சபை என்ற வகையில், நாம் சீஷர்களாக, ஊழியர்களாக மற்றும் பின்பற்றாளர்களாகக் கிறிஸ்துவுக்கு உரியவர்களாகின்றோம். அவருடைய சித்தத்திற்கு நம்மை நாம் உண்மையாக ஒப்புக் கொடுத்தலின் மூலம் அவருடைய கர்த்தத்துவத்தின் கீழ் நாம் வாழ்கின்றோம். நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தை தேவன், கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோருக்கு நமது அன்றாட பதில்செயலாக்குகின்றோம். நாம் சபையை தேவனுடைய ராஜ்யம், கிறிஸ்துவின் சரீரம் அல்லது தேவனு டைய குடும்பம் என்ற எந்தக் கண்ணோட்டத்தில் நோக்கினாலும் கிறிஸ்தவர்களின் பதில்செயலானது எப்பொழுதுமே கீழ்ப்படிகின்ற விசவாசமாகவே உள்ளது. ஒவ்வொரு பாவியும் தைரியமான நம்பிக்கை யுடன் சபையில் பிரவேசித்து கிறிஸ்து நம்மை இல்லத்திற்கு அழைக்கும் வரையிலும் அல்லது நம்மை அழைத்துச் செல்ல அவர் வரும் வரையிலும் அவருக்கு முன்பாக விசுவாசத்தில் நடந்து கொள்ளுதல் என்பது மாபெரும் தேவையாக உள்ளது என்பதை அவரது வசனத்தின் சாட்சியம் மூலமாகவும் வாழ்வின் சாட்சியம் மூலமாகவும் நாம் காண்கின்றோம்.*

*ராகேலை நீங்கள் மணம் செய்து கொள்ள முடிவதாய் இருக்கும் பொழுது, லேயாளுடன் குடியமர்ந்து விட வேண்டாம்! நீங்கள் இயேசு ஸ்தாபித்த உண்மையான சபையாராய் இருக்க முடியும்!*

---

குறிப்பு

*[1]"சபை" என்கிற தொடர்பாடத்தில் இது மூன்றாவது நூலாகும். "சபை" என்றால் என்ன? மற்றும் "சபைக்கு" தேவனுடைய வடிவமைப்பு என்பவை மற்ற இரு நூல்களாகும். இவை ஆசிரியரால் ஸர்ஸி அர்க்கன்ஸாஸில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. புதிய ஏற்பாட்டின் சபையைப் பற்றிய அதிகமான விளக்கங்களுக்கு இவை உதவும்.*

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. சபை என்பது எதுவாயிருப்பதில்லை என்று காண்பது உதவி நிறைந்ததாக உள்ளது ஏன்?
2. வேத வசனங்களில் முன் வைக்கப்பட்டபடி சபையின் சுருக்கமான விவரிப்பைத் தரவும்.
3. சபையானது ஆராதிக்கக் கூடும் இடத்துடன் கொண்டுள்ள/ நிலைநிறுத்துகின்ற உறவு என்ன?
4. சபையானது கூடிவரும் கட்டிடம் அல்ல என்பதில் நீங்கள் காண்கின்ற அனுகூலங்கள் யாவை?
5. சபையானது மற்றவர்களுடனான ஐக்கியத்தைக் காட்டிலும் மேலானதாக உள்ளது எவ்விதம்?
6. ஆவிக்குரிய குடும்பத்தின் பாகமாய் இருத்தல் என்பதன் அர்த்தம் என்ன?
7. தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிப்பது எவ்விதம்?
8. சபை என்பது மனிதருடையதல்ல ஆனால் தேவனுடைய கருத்தேயாகும் என்பதை வேத வசனங்களின் துணை கொண்டு நிரூபிக்கவும்.
9. சபை என்பது பதிலீடு அல்ல ஆனால் தொடக்கத்திலிருந்தே தேவனுடைய திட்டமாகும் என்பதை வேத வசனங்களில் இருந்து நிரூபிக்கவும்.
10. சபை என்பது தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாகும் என்று சுட்டிக்காட்டுகின்ற வேத வசனப் பகுதிகளை குறிப்பிடவும்.
11. கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் என்றால் என்ன?
12. சுவிசேஷத்திற்கான நமது அன்றாட கீழ்ப்படிதல் எப்படி இருக்க வேண்டும்?